
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1053

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

42



# மொழி உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம்!

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

மனித சுயமுன்னேற்றத்தின் தொடக்கம் ‘தொடக்கக் கல்வி’ என்கிறது உலக சுகாதார அமைப்பு. சமூக மற்றும் பண்பாட்டுச் சிக்கல்களை எதிர்கொண்டு வளரும் திறன்கள், தொடக்கக் கல்வியில்தான் கிடைக்கிறது என்கிறது யுனிசெஃப். தொடக்கக் கல்வியானது குழந்தைகளின் உரிமைகளில் ஒன்று என்கிறது யுனெஸ்கோ. தொடக்கக் கல்வி கடினமானதாக இல்லாமல், எளிமையாக இருக்க வேண்டுமென்பதும், சர்வதேச கல்வியியல் ஆய்வு முடிவுகள் தரும் அறிவுறுத்தல். இப்படி தொடக்கக் கல்வியின் அவசியத்தை சர்வதேச அமைப்புகள் பல வலியுறுத்துகின்றன. இவை அனைத்தும் இந்தியாவுக்கும் பொருந்தும் என்றாலும்கூட, பிறப்பின் அடிப்படையில் கல்வி மறுக்கப்பட்ட இந்தியாவில், தொடக்கக் கல்வியை எந்த வடிவத்தில் தர வேண்டுமென்பதும் முக்கியமானதாக உள்ளது.

கல்வியின் வாசனையையே நுகராத ஒரு தலைமுறையை கல்விச்சாலைக்குள் கொண்டுவர தொடக்கக் கல்வியை, பொத்தாம்பொதுவாக எப்படி வேண்டுமானாலும் தரலாம் என்றால், நிச்சயம் போதாமையில்தான் முடியும். பல்வேறு இனங்கள், மதங்கள், கலாச்சாரப் பின்னணி கொண்ட பூர்வகுடி இந்தியர்களுக்கு அவரவர் தாய்மொழியில் தொடக்கக் கல்வியைக் கொடுக்கும்போதுதான், எல்லோரையும் உள்ளடக்கிய கல்வி கற்ற தலைமுறையை உருவாக்க முடியும். இல்லாவிட்டால், தொடக்கக் கல்வியிலேயே இடைநிற்றல் பெருகிவிடும்.

தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வி மாணவர் சேர்க்கை 100%. இடைநிற்றலோ 0. ஆனால், பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேசத்திலோ தொடக்கக் கல்வியிலேயே 2.7% மாணவர்கள் இடைநிற்பதாக ஆய்வுகள் சொல்கின்றன. எட்டாம் வகுப்பு வரை தமிழ்நாட்டில் இடைநிற்றல் பூஜ்யமாகத்தான் உள்ளது. காரணம், தமிழ்நாட்டில் அவரவர் தாய் மொழியில் தொடக்கக்கல்வி கற்றுத்தரப்படுகிறது. அது அவர்களுக்கு கற்றல் அணுகலை எளிமையாக்குகிறது. குறிப்பாக, தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது உள்ளிட்ட பிற மொழிகளிலும் தமிழ்நாட்டில் தொடக்கக்கல்வி கற்றுத் தரப்படுகிறது. எந்தெந்தப் பகுதிகளில் எந்த மொழிச் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கிறார்களோ, அவர்களுக்கு அந்தந்த மொழியில் தொடக்கக் கல்வி தரப்படுகிறது. குறிப்பாக சென்னையில் உருது, தெலுங்கு மொழி கற்றுத்தரும் பள்ளிகள் நீதிக்கட்சி காலத்தில் இருந்தே செயல்படுகின்றன.

அதேபோல மாநில எல்லைகளில் வசிக்கும் மக்கள் தமிழ் மட்டுமின்றி, அண்டை மாநில மொழிகளில் பேசுவோரும் கலந்திருக்கின்றனர். அந்தப் பகுதிகளில் எல்லாம் அவரவர் தாய்மொழியே கற்றுத் தரப்படுகிறது. அடுத்து, அவர்கள் உயர்கல்விக்கு வரும்போது, தமிழையும் ஒரு பாடமாக கற்கிறார்கள். இதனால், அவர்களின் தாய்மொழியும் பாதுகாக்கப்படுகிறது, தமிழும் கற்றுக்கொள்கிறார்கள். அவர்களின் கல்வி உரிமையும் நிலைநாட்டப்படுகிறது. ஆனால், ‘தெலுங்கு, மலையாளம், கன்னடம் எல்லாம் கற்றுத்தரும் இந்த திராவிட மாடல் இந்தியை மட்டும் கற்றுத்தராமல் தமிழர்களை வஞ்சிக்கிறது, இந்தி கற்றுக்கொண்டு தமிழர்கள் முன்னேறுவதைத் தடுக்கப் பார்க்கிறது’ என்ற சனாதான குரல்கள் இப்போது எழத் தொடங்கியுள்ளன.

“இந்தி தெரியாமல் டெல்லியில் போய் எப்படி சிரமப்படுகிறேன் தெரியுமா?” என நிர்மலா சீதாராமன், எல்.முருகன் போன்றோர் பேசி இந்த வாதத்துக்கு வலுசேர்க்கத் துடிக்கிறார்கள்.

### இந்திக்கு அடுத்து சமஸ்கிருதம்

தென்னிந்தியாவில் இந்தி மொழியைப் பரவலாக்கம் செய்வதற்காக 1918-ஆம் ஆண்டு மகாத்மா காந்தியடிகளால் சென்னையில் இந்தி பிரச்சார சபா உருவாக்கப்பட்டது. இப்போதும் இந்தி பிரச்சார சபா செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடெங்கும் பல நகரங்களில் இப்போது இந்தி கோச்சிங் மையங்கள் வந்துவிட்டன. தனியார் பள்ளிகளிலும் இந்தி ஒரு பாடமாகவே உள்ளது. விரும்பியவர்கள் படிக்கலாம், யாரும் மறுக்க முடியாது. ஆனால், இந்தியை அரசுப் பள்ளிகளில் கட்டாயப் பாடம் ஆக்குவதற்கு, இந்தியை தாய்மொழியாகக் கொண்ட மக்கள் தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் அடர்த்தியாக வாழவில்லை. இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள்கூட ஒரே பகுதியில் அடர்த்தியாக இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களிலும் திருமணம் ஆகி, குடும்பத்தோடு தங்கி, இங்கேயே வசிப்பவர்கள் அரிதுதான். அதனால் இந்தியை குறிப்பிட்ட ஏதேனும் ஒருபகுதியில்கூட கட்டாயப் பாடமாக்க வேண்டிய தேவை தமிழ்நாட்டில் இல்லை என்பதுதான் யதார்த்தம். தேசிய மொழி என்று சொல்லி கட்டாயமாக்கச் சொன்னால், அது அரசியல் சாசனத்துக்கே முரணானது. நூற்றாண்டுக்கு முன்பே இந்த வாதத்தை முறியடித்துவிட்டது திராவிட இயக்கம்.

அதேசமயம் கட்டாயப் பாடமாக, புகுத்தினால், என்ன நடக்கும் என்பதற்கு, உத்தரப் பிரதேசமே நல்ல சான்று. உத்தரப் பிரதேசத்தில் இந்திக்கு அடுத்து உருது பேசும் மக்கள் அதிகம் இருக்கிறார்கள். ஆனால், பாடத்திட்டங்கள், அரசுத்துறைகளில் இருந்து உருது வார்த்தைகளைத் தேடித்தேடி நீக்குகிறது அம்மாநில பா.ஜ.க. அரசு. பள்ளிகளில் உருதுவில் இறை வணக்கம் செய்ய அனுமதி மறுக்கிறார்கள். உருது ஆசிரியர்கள் பணி நியமனங்களை அலசி ஆராய்ந்து, அவர்களின் கோப்புகளில் எங்கேனும் சிறு பிழை இருக்காதா எனத் தேடித்தேடி பணி நீக்கம் செய்கின்றனர். பல தொடக்கப் பள்ளிகளில் சமஸ்கிருதம் கட்டாயப் பாடமாக்கப்பட்டு விட்டது. அரை நூற்றாண்டுக்கு முன்பு, அங்கு இந்தி நுழைந்தது, இப்போது அது சமஸ்கிருதமாக மாறிக்கொண்டிருக்கிறது. போஜ்புரி காணாமல் போய்விட்டது.

> தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது உள்ளிட்ட பிற மொழிகளிலும் தமிழ்நாட்டில் தொடக்கக்கல்வி கற்றுத் தரப்படுகிறது. எந்தெந்தப் பகுதிகளில் எந்த மொழிச் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கிறார்களோ, அவர்களுக்கு அந்தந்த மொழியில் தொடக்கக் கல்வி தரப்படுகிறது.

### உருதும் தமிழும்

தமிழ்நாட்டில் இப்போது இந்தியைத் திணிக்கப் பார்க்கிறார்கள், அது நடந்துவிட்டால் இங்கும் அடுத்து சமஸ்கிருதம் வரும். அப்போது தமிழ் இல்லாமல் போகும். அதை உணர்ந்துதான் தமிழ்நாடு இந்தித் திணிப்பை, சமஸ்கிருதத் திணிப்பை எதிர்க்கிறது. ஆனால், மொழிச் சிறுபான்மையினருக்கு அவரவர் தாய்மொழியில் தொடக்கக்கல்வியை தருவதால், அவர்களின் மொழி உரிமையும் பாதுகாக்கப்படுகிறது. தமிழும் செழிக்கிறது. குறிப்பாக, என் வீட்டிலேயே என் பெற்றோர் தொடக்கக் கல்வியை உருது மொழியில் கற்றவர்கள். உருது இல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் கல்விச்சாலைக்குள் நுழைந்திருப்பார்களா அல்லது இடைநில்லாமல் கல்வியைத் தொடர்ந்திருப்பார்களா எனத் தெரியவில்லை. அவர்கள் உயர்கல்விக்குச் செல்லும்போது தமிழை கற்றார்கள். அடுத்து நான் தமிழ் படிக்கும் சூழல் உருவானது. தமிழ்நாட்டில் மொழிச் சிறுபான்மையினர் குடும்பங்கள் அனைவருக்கும் இது பொதுவானதே.

அதேபோல மொழிச் சிறுபான்மையினருக்கும் தமிழுக்கும் இடையிலான பாலங்களாக பல முயற்சிகளை திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கிறது. குறிப்பாக, உருது அகாடமியின் பங்கு இதில் மகத்தானது.

...நீளும்

## ஆன்மீகத்தில் அரசியலை விலக்கிவையுங்கள்!

இந்துக்களின் வழிபாட்டு உரிமையைப் பாதுகாக்கப் போராடுகிறோம் என்று பா.ஜ.க. நடத்தி வரும் அரசியல் நாடகத்தை அம்பலப்படுத்தியுள்ளார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கனகராஜ். அவரது பதிவில் இருந்து...

“இந்துக்கள் மட்டுமின்றி, எந்தவொரு மதத்தைப் பின்பற்றுவோரின் வழிபாட்டு உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. ஆனால், மக்களின் அடிப்படை வாழ்வாதார பிரச்சினைகளில் சங்பரிவார் ஒருபோதும் தலையிடாது. மக்களை திசை திருப்புவதே இவர்களது நோக்கம். உதாரணத்துக்கு, பாபர் மசூதி கட்டப்பட்டது 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில். அந்தக் காலம் தொட்டு 18-ஆம் நூற்றாண்டு வரை பாபர் மசூதி கட்டப்பட்ட இடம் ராமர் பிறந்த இடம் என்று யாரும் குறிப்பிடவில்லை. சாவர்க்கர் 1966-ஆம் ஆண்டு அவர் இறக்கும் காலம் வரை, இந்தப் பிரச்சினையை ஒருபோதும் எழுப்பியது கிடையாது. ஆர்.எஸ்.எஸ். ஆல் உருவாக்கப்பட்ட ஜன சங்கம் போணியாகவில்லை என்பதால், 1980-ஆம் ஆண்டு பா.ஜ.க.வை ஆர்.எஸ்.எஸ். உருவாக்குகிறது. அதற்குப் பின்புதான் இந்தப் பிரச்சினையை ஆர்.எஸ்.எஸ்.சின் பரிவாரங்கள் தீவிரப்படுத்த ஆரம்பித்தார்கள்.

பா.ஜ.க.வை தேர்தலில் வெற்றி பெறச் செய்வதற்காகவே, ராமருக்கு அநீதி இழைக்கப்பட்டதாக பிரச்சாரம், விளம்பரம், கலகங்கள், ரத யாத்திரைகள் என்று தொடங்கினார்கள். ஆனால், 2024 தேர்தலில் ராமர் கோயிலை உள்ளடக்கிய பைசாபாத் நாடாளுமன்றத் தொகுதியில் பா.ஜ.க. தோற்ற பிறகு, ராமரைக் கைவிட்டுவிட்டு, ‘ஜெய் ஜெகநாத்’ என்றனர். இப்போது அவர்கள் திருப்பரங்குன்றத்தில் முருகன் பெயரைச் சொல்லி, இதே போன்ற ஒரு சதியை தொடங்கியிருக்கிறார்கள்.

இப்போதும் தேர்தல் நெருங்குவதால் முருகன், இந்து ஒற்றுமை, இந்துக்களின் வழிபாட்டு உரிமை என்று உருட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இவர்களுக்கு ஆன்மிகம், இந்து மதம், இந்து ஒற்றுமை, வழிபாட்டு உரிமை என்பதெல்லாம் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான ஒரு புராஜக்டே தவிர, பக்தியோ ஆன்மிகமோ கிடையாது. வழிபாட்டு உரிமை என்கிற பெயரில் மக்களை மோதவிட்டு வழியும் ரத்தத்தில் தேர்தல் ஆதாயம் தேடுவோரை அமைதி, நல்லிணக்கம், மாநில வளர்ச்சி ஆகியவற்றில் நம்பிக்கையுள்ள யாரும் அனுமதிக்கக் கூடாது. ஆன்மிகத்தை அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்தும் இத்தகைய நபர்களிடமிருந்து ஆன்மிகவாதிகள் விலகியிருக்க வேண்டும்” என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்





ச.ராஜன்

### தலைவரை சந்தித்த இரட்டிப்பு மகிழ்ச்சி!

2015-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் தேதி, என் பிறந்தநாளை முன்னிட்டு, நம் தானைத் தலைவரிடம் வாழ்த்து பெற குடும்பத்துடன் கோபாலபுரம் இல்லம் சென்றிருந்தோம். அன்றுதான், எனக்கு பெரம்பூர் பகுதி 46-வது வட்டக் கழக துணைச் செயலாளர் பொறுப்பும் கிடைத்த நாள் என்பதால், தலைவரைச் சந்தித்தது இரட்டிப்பு மகிழ்ச்சி அளித்தது. தலைவர் எங்களை அமரவைத்து சற்று உரையாடியது, நாங்கள் பெற்ற பெரும்பேறு.

**- ச.ராஜன், 46-வது வட்ட துணைச் செயலாளர், பெரம்பூர் தெற்குப் பகுதி, சென்னை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### இளைஞர்களே, கழகத்தின் பட்டாளம்!

1958-ஆம் ஆண்டு, மே மாதம் 10 மற்றும் 11 தேதிகளில் தஞ்சை மாவட்டக் கழகத்தின் 3-வது மாநாட்டில், மாநாட்டுத் திறப்பாளரான ப.உ.சண்முகம் உரையில் இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார். “நல்ல இதயம் படைத்த இளைஞர்களே! திராவிட முன்னேற்றக் கழகம் உங்களை அழைக்கிறது, வந்து சேருங்கள் பட்டாளத்தில்!” என்கிற அவரின் அழைப்பு இன்றும் கழகத்தின் குரலாக காலத்தைக் கடந்தும் நிற்கிறது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.